# அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இருக்கண்குடி

## சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.

-----

E.Code : VIRAT001 ITMS No.35702 அலுவலக தொலைபேசி :7339464328
மின்னஞ்சல் : aceosvg_35702.hrce @ tn.gov.in

**ந.க.எண்.625/2022/அ4 நாள் 25.07.2022**

**நன்செய் நிலம் மறுபொது ஏலம் அறிவிப்பு நாள் : 03.08.2022**

**இரண்டாம் அழைப்பு**

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான கீழ்க்கண்ட விபரப்படியான நஞ்சை நிலங்களை பசலி 1432 முதல் 1434 முடிய மூன்று பசலி ஆண்டுகளுக்கு (30.06.2025 முடிய) குறுகிய கால பயிர் செய்து கொள்ளும் உரிம ரொக்க குத்தகை பொதுஏலம் 03.08.2022ம் தேதி காலை 11.30 மணிக்கு விருதுநகர் சரக ஆய்வர் முன்னிலையில் திருக்கோயில் அலுவலகத்தில் நடைபெறும்.

| வ. எண். | நஞ்சை நிலம் | பரப்பளவு | குத்தகை காலம் | முன்வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | சர்வே எண்.296/2ல் | 46 சென்ட் | 3 வருடம் | ரூ.500/- |
| 2. | சர்வே எண்.300 | 50 சென்ட் | " | ரூ.500/- |
| 3. | சர்வே எண்.157/2 மற்றும் 158 | 1 ஏக்கர் 40 சென்ட் | " | ரூ.500/- |
| 4. | சர்வே எண்.156/1ல் | 42 சென்ட் | " | ரூ.500/- |

**பொது நிபந்தனைகள்**

1. ஏலம் கேட்பவர்கள் மேலே குறிப்பிட்டுள்ளபடி உரிய முன்வைப்புத் தொகையினை ஏல தினத்தன்று செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ளலாம். முன்வைப்புத் தொகை செலுத்தாதவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
2. திருக்கோயிலுக்கு எந்த விதத்திலும் முன் பாக்கியுள்ளவர்கள் திருக்கோயிலை எதிர்த்து வழக்காடியவர்கள், வழக்காடுபவர்கள், திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் ஏலம் கேட்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.
3. ஏலம் கேட்பவர்கள் பசலி 1432க்கு ரொக்க குத்தகை எவ்வளவு என்று ஏலம் கேட்க வேண்டும். மேற்படி ஏல தொகையில் 10% உயர்வு செய்து 1433க்கும் 1433ம் பசலி ஏலத்தொகையில் 10% உயர்வு செய்து 1434ம் பசலிக்கும் அனுபவித்துக் கொள்ளலாம்.
4. ஏலம் எடுத்தவர் ஏலத்தொகையை ஏலம் எடுத்தவுடன் உடன் செலுத்தி விடவேண்டும். தவறினால் ஏலம் ரத்து செய்யப்பட்டு மறுஏலம் விடப்படும். மறு

ஏலத்தில் குறைவு ஏற்பட்டால் நஷ்டத் தொகை முன் ஏலதாரரிடம் இருந்து வசூலிக்கப்படும்.

5. ஏலம் கேட்க வந்தவர்கள் கூட்டணி அமைத்துக் கொண்டு குறைந்த தொகைக்கு கேட்டாலும் அல்லது வேறு காரணங்களுக்காகவும் ஏலத்தை நடத்தாமல் நிறுத்தி வைக்க நிர்வாகிகளுக்கு பூரண அதிகாரம் உண்டு.
6. பொதுவாக அதிக தொகைக்கு ஏலம் கேட்பவர்களுக்கு ஏலம் ஜாரி செய்யப்படும். ஆனால் எந்த கேள்வியையும் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ ஏலத்தை மாற்றி வைக்கவோ நிர்வாகிகளுக்கு பூரண அதிகாரமுண்டு.
7. ஏலம் முடிந்த பின்னர் ஏலம் உயர்ந்த கேள்விதாரருடைய முன்வைப்புத் தொகை தவிர இதர முன் வைப்புத் தொகை திரும்ப கொடுக்கப்படும். முன்வைப்புத் தொகைக்கு வட்டி எதுவும் வழங்கப்பட மாட்டாது.
8. ஏலம் இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரத்திற்குட்பட்டது.
9. ஏலம் முடிவு செய்த போதிலும் உத்தரவு அனுப்பும் முன் ஏலதாரருக்கு எவ்வித முகாந்திரமும் தெரிவிக்காமல் ஏலத்தை ரத்து செய்யவும், மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கவும், ஏலம் நடத்தும் நிர்வாகிகளுக்கு பூரண அதிகாரமுண்டு.
10. எக்காரணத்தைக் கொண்டும் ஏலம் எடுத்தவர் தான் எடுத்த உரிமத்தினை பிற நபர்களுக்கு மாற்றக்கூடாது.
11. ஏல நிபந்தனைகளில் எதை மீறினாலும், மீறியதாக தெரிய வந்தாலும் ஏலம் ரத்து செய்யப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.
12. ஏலம் எடுத்தவர் இயற்கை சீற்றம் மழையின்மை வறட்சி போன்றவைகளால் பயிர் விளைச்சல் இல்லை என்பதால் குத்தகை தள்ளுபடி வழங்கப்பட மாட்டாது.
13. ஏலம் எடுத்தவர் மேற்படி நிலத்தில் இயற்கை உரம் உரிய முறையில் இட்டு நிலத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படாதவாறு பயிர்தொழில் மட்டும் செய்ய வேண்டும். விவசாயம் தவிர இதர காரியங்களுக்கு மேற்படி நிலத்தை பயன்படுத்தக்கூடாது. அவ்வாறு பயன்படுத்தியது தெரிய வந்தால் ஏலம் ரத்து செய்யப்பட்டு நிபந்தனையின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
14. ஏலம் எடுத்தவர் உரிய ஏல காலம் முடிந்தவுடன் மேற்படி நிலம் திருக்கோயில் நேரடி வசம் வந்ததாக கருதப்படும். மேற்படியாருக்கு அதில் எவ்வித உரிமையோ பின் தொடர்ச்சியோ கால கெடுவுக்கு பிறகு கிடையாது. இது தொடர்பாக தனியாக அறிவிப்பு எதுவும் வழங்கப்படமாட்டாது.
15. ஏலதாரர் ஏலம் ஊர்ஜிதம் செய்தவுடன் தன் சொந்தப் பொறுப்பிலும் செலவிலும் ரூ.20/- முத்திரைக் காகிதத்தில் ஒப்பந்தப்பத்திரம் ஏல நிபந்தனைகளை ஏற்று ஏலக்கெடு முடிந்ததும் சுவாதீனம் திருக்கோயில் வசம் ஒப்படைக்க சம்மதம் தெரிவித்து எழுதிக் கொடுக்க வேண்டும்.
16. இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| இருக்கண்குடி<br>25.07.2022 | உதவி ஆணையர்/<br>செயல் அலுவலர் | தலைவர்<br>பரம்பரை அறங்காவலர் குழு |